# 2018 – 2019

சீதாலட்சுமி, முருகேஸ்வரி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பெற்றவர்களுக்கு பரிசுகள் வழ...

## காயல்பட்டினம் வாவு வஜீஹா மகளிர் கல்லூரி நாள் விழா



விழாவில் கல்லூரி பேராசிரியர்களை கௌரவிக்கிறார் தமிழக அரசின் முதன்மைச் செயலர் குமார் ஜெயந்த்.

ஆறுமுகனேரி, மார்ச் 8: காயல்பட்டினம் வாவு வஜீஹா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 13ஆவது கல்லூரி நாள் விழா நடைபெற்றது.

கல்லூரி நிறுவனர் தலைவர் எஸ். செய்யிது அப்துர்ரஹ்மான் தலைமைவகித்தார். மாணவி பி.எம். சேகு சபீரா கிராஅத் ஓதி நிகழ்ச்சியை தொடங்கிவைத்தார். வணிகவியல் துறைத் தலைவர் எல்.ஆர். சுபா வரவேற்றார். கல்லூரி முதல்வர் த.இ. வாசுகி 2018-2019ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினராக அரசு முதன்மைச் செயலர் குமார்ஜெயந்த் கலந்துகொண்டு பேசினார். கல்லூரிச் செயலர் எம்.எம். மொகுதஸீம் வாழ்த்திப் பேசினார். கல்லூரி துணைச் செயலர் எஸ்.ஏ.ஆர். அஹமது இஸ்ஹாக் பரிசு வழங்கினார். கல்லூரி மாணவிகள் பேரவைத் தலைவர் பி. கோல்டா எஞ்சனா நன்றி கூறினார்.

C

IMPE 2019 CHI IMPI

IMPE 2019 CON SUR

IMPE 2019 VC SUR

IMPE 2019 CS SUR

IMPE 2019 BU SUR

Interes Rs.500 12.03.2

R.C. Vasuki

# காயல்பட்டினம் மகளிர் கல்லூரியில் தேர்தல் விழிப்புணர்வு முகாம்



முகாமில் பேசுகிறார் திருச்செந்தூர் கோட்டாட்சியர் தனப்பிரியா.

ஆறுமுகனேரி, மார்ச் 20: காயல்பட்டினம் வாவு வஜீஹா மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரியில் தேர்தல் விழிப்புணர்வு முகாம் நடை
பெற்றது.

கல்லூரியின் மாணவிகள் பேரவை தேர்தல் விழிப்புணர்வு சங்கம்,
மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய இம்முகாமுக்கு, கல்லூரி நிறு
வனர் தலைவர் எஸ். செய்யிது அப்துர் ரஹ்மான் தலைமை வகித்தார்.
மாணவி முஷ்ஷர்ரஃபா சுல்தானா கிரா அத் ஓதினார். அஹமது இஸ்
ஹாக் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் ஆர்.சி. வாசுகி வர
வேற்றார். வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வண்
ணக்கோலம், சுவரொட்டி வாசகங்கள், பதாகை வாசகங்கள், பேச்சுப்
போட்டி ஆகியவை நடைபெற்றன. கையெழுத்து பிரசாரமும் நடை
பெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருச்செந்தூர்
கோட்டாட்சியர் தனப்பிரியா பரிசு வழங்கினார். வட்டாட்சியர் தில்
லைப்பாண்டியன் உள்ளிட்டோர் பேசினர். கோட்டாட்சியர் தலை
மையில் மாணவிகள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். வாக்குப்
பதிவு செய்யும் முறை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.
தமிழ்த்துறை தலைவர் ஆர். அருணாஜோதி நன்றி கூறினார்.

# 10 நாள்களில் ரூ. 69.72 லட்சம் பறிமுதல்

நாகர்கோவில், மார்ச் 20: கன்னியாகுமரி மாவட்டத்தில் உரிய ஆவணங்
களின்றி, எடுத்துச் செல்லப்பட்டதாக 10 நாள்களில் ரூ. 69 லட்சத்து
72 ஆயிரத்து 171 ரொக்கப் பணம் தேர்தல் பறக்கும் படையினரால் பறி

R. C. Yasmi

தினமலர் 5/8/18

ரியா, 2 கிலோ சூப்பர் அவர் கூறினார்.

# காயல்பட்டினம் கல்லூரியில் மாணவர் பேரவை துவக்க விழா

ஆறுமுகநேரி, ஆக.5–

காயல்பட்டினம் வாவு வஜீஹா மகளிர் கலை மற்
றும் அறிவியல் கல்லூரியில் 13வது மாணவர் பேரவை
துவக்க விழா நடந்தது.

விழாவிற்கு கல்லூரி நிறுவனர் தலைவர் வாவு செய்
யது அப்துல் ரஹ்மான் தலைமை வகித்தார். சிறப்பு
விருந்தினராக, தூத்துக்குடி கீதாஜீவன் கலை மற்றம்
அறிவியல் கல்லூரி முதல்வர் மலர்கொடி கலந்து
கொண்டு சிறப்புரையாற்றினார். வணிகவியல் துறைத்
தலைவரும் மாணவர் பேரவை ஒருங்கிணைப்பாளரு
மான சுபா வரவேற்றார். கல்லூரி முதல்வர் வாசுகி
சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.
மாணவியரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மாணவப்
பேரவைத் தலைவர் 3ம் ஆண்டு இயற்பியல் மாணவி
கோல்டா ஏஞ்சலினா, துணைத்தலைவர் 2ம் ஆண்டு
வணிகவியல் மாணவி செய்யது அஜீபா, செயலாளர் 3ம்
ஆண்டு ஆங்கில இலக்கிய மாணவி அஜேகா, துணைச்
செயலாளர் முதலாமாண்டு வணிகச் செயலாற்றியல்
மாணவி அபாமிதா ஆகியோருக்குப் பதவிக்குரிய சீரு
டைகளை வழங்கி அடையாளச் சின்னம் அணிவித்து
வைத்தார். இதனைத் தொடர்ந்து மாணவப்பேரவைத்
தலைவர் கோல்டா ஏஞ்சலாவுக்கு பதவிப்பிரமாணம்
செய்து வைக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர் பேர
வைத் தலைவர் மற்றவர்களுக்கு பதவிப்பிரமாணம்
செய்து வைத்தார். கல்லூரிச் செயலர் வாவு மொகுத
ஸிம், துணைச்செயலர் வாவு அஹமது இஸ்ஹாக் ஆகி
யோர் பேசினர். விழாவில் கல்லூரி இயக்குநர், கல்லூரி
நிர்வாகக்குழு உறுப்பினர்கள், உதவிப் பேராசிரியர்கள்,
மாணவியர் கலந்து கொண்டனர்.


கோவில்பட்டி

# காயல்பட்டினம் மகளிர் கல்லூரியில் மனித உரிமைகள் விழிப்புணர்வு முகாம்



நிகழ்ச்சியில் பேசுகிறார் சமூக நல ஆர்வலர் எஸ்.கிரீஷ்குமார்.

**ஆறுமுகனேரி,ஆக.6:** காயல்பட்டினம், வாவு வஜீஹா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப் பணி திட்டம் அணி சார்பில் இரு தினங்கள் மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு கல்லூரி முதல்வர் இரா. செ.வாசுகி தலைமை வகித்தார். சான்றுறுதி அலுவலரும் சமூக நல ஆர்வலருமான எஸ். கிரீஷ்குமார் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவிகளுக்கு மனித உரிமை என்பது என்ன அவற்றின் செயல்கள் மற்றும் பயன்பாடுகள் என்னென்ன என்பது குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

ஏற்பாடுகளை கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் செ. செல்வசாந்தி மற்றும் த. கோகிலா ஜெனிபர் ஆகியோர் செய்திருந்தனர்.

# காயல்பட்டினம் வாவு வஜீஹா மகளிர் கல்லூரியில் புத்தாக்க இயக்க நிறைவு விழா

**தூத்துக்குடி, மே 18–** காயல்பட்டினம் வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொழில் முனைவோர் அமைப்பு மற்றும் புத்தாக்க இயக்கத்தின் நிறைவு விழா நடந்தது.

இதில் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு செய்யது அப்துர் ரஹ்மான், கல்லூரி செயலர் ஹாஜி. வாவு மொகுதஸீம், துணைச் செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு அஹமது இஸ்ஹாக் ஆலிம், கல்லூரி இயக்குனர்கள் மெர்சி ஹென்றி மற்றும் வாசுகி கல்லூரி முதல்வர் ரமா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாணவி ஆயிஷா பானு கிராத் ஓதினார். வணிக நிர்வாகவியல் மாணவி மதினத்துல் ரஷ்மியா வரவேற்றார். தொழில் முனைவோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வணிக நிர்வாகவியல் துறைத் தலைவர் ரஹ்மத் ஆமீனா பேகம் அறிமுக உரை வழங்கினார்.

பேராசிரியை மெர்லின் சித்ரா செல்வி, வஜீஹா ஸ்கில் அகாடமி இயக்குனர் முத்து மொகுதும் பாத்திமா, வக்கீல் இந்துமதி, வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி தொழில் புத்தாக்க அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆயிஷா முஜமில்லா ஆகியோர் பேசினர்.

தொடர்ந்து இக்கல்வியாண்டில் வணிக நிர்வாகவியல் துறை நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.


கட்சிக்காரருக்கு உயிருக்கும், உடமைக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் யாதொரு நபரும் ஈடுபட்டாலும் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தபசில்**

தூத்துக்குடி பதிவு மாவட்டம், திருச்செந்தூர் சார்பதிவகம், திருச்செந்தூர் வட்டம், கீழத் திருச்செந்தூர் வருவாய் கிராமம், திருச்செந்தூர் நகராட்சி 2–வது வார்டு, வெயிலுகந்தம்மன் கோவில் தெரு, மேல்சிரசில் நத்தம் சர்வே எண்.241/1க்கு புதிய சர்வே 242/4 நம்பர் 200 சதுரமீட்டர் ஹெக்.0.02.00 மனை நிலத்திற்கு மேற்படி மனை நிலத்திற்குள் அமைந்துள்ள மனை வீடு வகையறாக்களுக்கும் எல்லை :

வடக்கே : கீழ்புறம் கிழமேல் 19 மீட்டருக்கு எங்களுக்குரிய சொந்த சுவர் மற்றும் செல்வன் மனை வீடு வகையறா, மேற்புறம் எங்களுக்குரிய சொந்த சுவர் மற்றும் சண்முகசுந்தரக் கோனார் அவர்களுடைய மனை வீடு வகையறாக்கள்.

மேற்கே : தென்வடல் ரோடு

தெற்கே : சொந்த சுவர் கந்தசாமி ஆச்சாரி மனை வீடு வகையறாக்கள் மற்றும் காமராஜ் நாடார் மனை வீடு வகையறாக்கள்.

கிழக்கே : தென்வடல் ரோடு

அதற்குள்பட்ட மனை நிலம் தென்வடல் கீழ்தலை 15.125 அடி மேல்தலை 14.438 அடி கிழமேல் தென்தலை 145.75 அடி வடதலை 137.50 அடிக்கு 2093.359 சதுரடிக்கு 200 சதுரமீட்டர் அளவுள்ள மனை நிலமும் மேற்படி மனை நிலத்திற்குள் 95 சதுரமீட்டர் அளவில் கட்டப்பட்டுள்ள கதவு எண்.169 கொண்ட காரைக்கட்டு மட்டப்பா வீடும், அதன் மீது 95 சதுரமீட்டர் அளவில் கட்டப்பட்டுள்ள கதவு எண்.169/1 கொண்ட காரைக்கட்டு வீடும் ஏணிப்படி வகையறாவிலும் ப்ளஸ்அவுட் கக்கூஸ் வகையறா மேற்படி வீடுகளில் இணைக்கப்பட்டுள்ள SC 07-361-019-79 மற்றும் SC 07-361-019-335 நம்பர் மின் இணைப்புகளும் மற்றும் அதைச் சார்ந்த எலக்ட்ரிக் பிட்டிங்ஸ்களும் மேற்படி வீட்டில் இணைக்கப்பட்டுள்ள 292 நம்பர் பஞ்சாயத்து குடிநீர் இணைப்பும் இவைகளுக்குரிய டெப்பாசிட் தொகைகளும் மேற்படி மனை நிலத்தின் தென்மேல் திசையில் 23.40 சதுரமீட்டர் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி.கட்டிடமும் மேற்படி கட்டிடத்திற்கு மேல்திசையில் 12.60 சதுரமீட்டர் அளவில் கட்டப்பட்டுள்ள ஆஸ்பெட்டாஸ் சீட் மேற்கூரையாக கொண்ட கட்டிடமும் மேற்படி வீட்டிற்குரிய கழிவு நீரானது மேற்புறம் திசையில் செல்லும் உரிமை பாத்தியதையும் உள்பட தபசில் விபரம் சரி.

**N.JERSON XAVIER,** B.A.,B.L.,
Advocate
Salaipudur, Paikulam

C23051816